மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 48/24 |
| பெயர் | : | முத்துலெட்சுமி (PW2) |
| த/பெ. | : | ஆதிராமன் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Ambikavathi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of August 2024

**முதல் விசாரணை**

1)நான் ஒட்டுடன்பட்டியில் வசிக்கிறேன்.அசா1 மதியழகனை தெரியும் அவர் என் மருமகன்.சாட்சி தங்கத்தை தெரியும்.அவர் ஓட்டுடன் பட்டியில் இருக்கிறார்.எதிரி அம்பிகாவதி என் அக்காவின் கணவர்.எனக்கு பிள்ளைகள் கிடையாது.அதனால் என்னுடைய வீடு அவருக்கு வேண்டும் என்று அடிக்கடி தொந்தரவு செய்வார்.

2)தேதி மாதம் சொல்ல தெரியவில்லை .1 வருடத்திற்கு முன்பாக இரவு 11 மணிக்கு மேல் நான் துாங்கி கொண்டிருந்தேன் எதிரி அரிவாளை நாடியில் வெட்டிவிட்டார்.(நீதிமன்றத்தில் சாட்சி தன்னுடைய நாடியில் இருக்கும் தழும்பினை காட்டினார்.சாட்சியின் நாடியில் வட்ட வடிவில் தையல் போட்ட தழும்பு இருந்தது.)இடது கை மணிக்கட்டிற்கு மேல் அரிவாளை வைத்து எதிரி வெட்டினார்.நான் கதவையை திறத்து மூன்றாவது தெருவில் உள்ள சாட்சி தங்கத்திற்கு வீட்டுக்கு சென்றேன்.நான் அவரது வீட்டின் கதவை தட்டினேன் என்னால் பேச முடியவில்லை.கதவை தட்டியவுடன் தங்கம் வந்து திறந்தார்.நான் என் மருமகன் அசா 1ற்கு போன் செய்து தகவல் சொல்ல சொன்னேன்.தங்கம் அசா 1ற்கு போனில் தகவல் தெரிவித்தார்.அசா 1 வந்தபின்னர் 108 ஆம்புலன்சில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.நான் குணமான பின்னர் போலிசார் என்னை விசாரித்தனர்.எதிரி ஏற்கனவே ஒரு கொலை செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(எதிரி ஆஜர்.எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞரால் எடுத்துரைப்பு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.